48 காலணா Regd. No. M. 2811

# சுதந்திரச் சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 20-5-33

## "வை கீழே ஆயுதத்தை!"




"எல்லோரும் ஆயுதத்தைக் கிழே வையுங்கள்" என்று எல்லா நாடுகளையும் அமெரிக்க அக்ராஸனாதிபதியாகிய ரூஸ்வெல்ட் எச்சரிக்கை செய்திருக்கின்றார். ஆயுதப் பரிகரணப் பேச்சு ஓர் புற மிருக்க, "இதர நாடுகளுக்கு சமமாக எங்கட்கும் ஆயுத பலமிருக்க வேண்டும்" என ஜெர்மனித் தலைவர் ஹிட்லர் கர்ஜிக்கின்றார். இது ஆயுதப் பரிகரணப் பேச்சா? ஆயுத முஸ்தீப்புப் பேச்சா?

## பட்டமோ பட்டம்!

சென்ற சில தினங்களாகத் தினசரிப் பத்திரிகைகளைக் கவனித்திருப்பவர்கள் 'சர்வ கலா சாலைப் பரீக்ஷை முடிவுகள்' என்ற தலைப்பின் கீழ் அநேக நம்பர்கள் போடப் பட்டிருந்ததைக் கண்டிருப்பார்கள். ஆயிரக் கணக்கான இளைஞர்கள், பலவிதப் பரீக்ஷைகளில் தேறியிருக்கிறார்கள். பல தடவை படையெடுத்துத் தேறியவர்களும் உண்டு. தோற்றுப் போனவர்களைப் பற்றிப் பிரஸ்தாபித்து துக்கம் கொண்டாடுவதற்கு நாம் தயாராயில்லை. ஆனால் பரீக்ஷைகளில் வென்றுள்ள வீரர்களிடம் தான் துக்கமோ சுகமோ கேட்க விரும்புகின்றோம்.

டெல்லியில் 'இம்பீரியல் ஸெக்ரடேரியட்' என்ற காரியாலயத்தில் 20 உத்தியோகங்கள் காலி விழுந்ததாம். அந்த 20 உத்தியோகங்களுக்கு ஆட்களைப் பொறுக்குவதற்கு ஓர் பரீக்ஷை ஏற்பாடாயிற்று. சொன்னால் பொய் போலிருக்கும். 1300 பேர் அந்த உத்தியோகங்களுக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறார்களாம். என்ன போட்டா போட்டி! என்ன கேவல நிலைமை! இவ்வளவு இளைஞர்களுக்கும் எங்கிருந்து உத்தியோகங்கள் கிடைக்கப் போகின்றன? நாட்டின் வறுமை நிலைமையானது விண்டு வைத்தது போலத் தோன்றுகின்றதல்லவா? தற்காலக் கல்வி முறைக்கு இதை விட அவமானம் வேறென்ன வேண்டும்?

நாட்டிலுள்ள அத்தனை மக்களுக்கும் தொழில் தேடித்தர வேண்டிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்தது. ஆங்கிலக் கல்வியை ஆர்வத்தோடு படித்த இளைஞர்களுக்கு வழி காட்டித் தர வேண்டியது ஆங்கில துரைத்தனத்தைச் சாராது போகுமோ? ஆனால் எந்த தேசத்திலும் துரைத்தன உத்தியோகங்களுக்குப் பொது ஜனங்கள் மதிப்பு வைக்க மாட்டார்கள். ஆனால் துர்ப்பாக்கியம் மிகுந்த நம் நாட்டில் தான் 'பென்ஷன்' உத்தியோகங்களிடம் பெருமதிப்பு இருந்து வருகிறது. நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்வதிலேயே இளைஞர் மோகம் பிடித்து அலைகின்றனர். கை வருந்தி உழைப்பதென்றால் நமது இளைஞர்களுக்கு கவுரவக் குறைவாகத் தோன்றுகிறது. இந்த மனோபாவம் படித்த மக்களிட மிருந்து என்றைக்கு மாறுகின்றதோ அன்றுதான் நாட்டுக்கு கதிமோக்ஷம் ஏற்படும். மேஜை நாற்காலி சேவகத்தில் என்றைக்கு வெறுப்புத் தட்டுகின்றதோ, அப்போதுதான் நாட்டிற்கு நலம்.

## பர்ணகுடித் தவச்சாலை

பூனாத் தவச்சாலையில் தவம் செய்யும் மகாத்மாவின் தேக நிலையைக் குறித்துப் பலரும் ஆச்சரியமடைய வேண்டி யிருக்கிறது. அவர் உபவாசம் ஆரம்பித்து 13 நாட்களாகியும் இன்றுதான் ஆரம்பித்தவர் போல அவ்வளவு தைர்யமாகவும், பலமாகவு மிருக்கின்றார் என்று தேவதாஸ் கூறுகிறார். வழக்கம் போல் படுக்கையை விட்டு காலை 4 மணிக்கே எழுந்து விடுகிறார். இரண்டு வேளையும் பிரார்த்தனையும், பஜனையும் நடக்கிறது. வாய் 'ராம நாமம்' ஜபித்துக் கொண்டே யிருக்கிறது. உபநிஷத்தும், கீதையும் பாராயணம் நடக்கின்றது. சங்கீதம் அவரது தேக நிலைக்குப் பலமளித்து வருகிறது. "எனது நேத்ரமே! நீ பாப நோக்கு நோக்காதே," "ஏ! பாண்டுரங்கா! உன் தரிசனம் என்று கிட்டும்?" "மூட மதியே! உன் முடிவு அணுகிற்று" என்பன போன்ற துக்காராம் ஸ்வாமியின் பாடல்களை காக்கா கலேல்கர் பாடிய போது பாபு ஓயாது தாளம் போட்டுக் கொண்டிருந்தாராம்.

ஹரிஜனச் சிறுவர் கைத்தொழிற்

**பொருட்காட்சி**

21, 22 தேதி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில்

மாலை 4 மணி முதல் 7 மணி வரையில்

நமது காரியாலயத்து மாடியில்

(8-d, பைக்ராப்ட்ஸ் ரோட்,)

நடைபெறும்.

பிரவேசக் கட்டணம் கிடையாது.

அனைவரும் விஜயம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

### "நிறுத்தி வைக்க முடியாது"

பிரான்சு ஜூன் மீ 15௳ செலுத்த வேண்டிய யுத்தக் கடன் தவணையை நிறுத்தி வைக்க முடியாது என்று பிரான்ஸுக்கு அமெரிக்கா தெரிவித்து விட்டது.

# மீண்டும் மகா யுத்தமா? (குசேலன் எழுதியது)

சில நாட்களாக ஐரோப்பிய ராஜீய உலகில் திடுக்கிடும் சம்பவங்கள் பல நிகழ்ந்து வருகின்றன. 1814ம் ஞூத்திலும், 1871ம் ஞூத்திலும் 1914ம் ஞூத்திலும் ஐரோப்பாவில் எத்தகைய உணர்ச்சிகள் நிரம்பி யிருந்தனவோ அதே உணர்ச்சிகள் இப்போது கொந்தளித்துக் கொண்டிருப்பதாக, லாயிட் ஜார்ஜு உள்பட பல அறிஞர்கள் கூறுகின்றனர். மீண்டும் ஐரோப்பா ரணகளமாகுமா? மீண்டும் இரத்த வெள்ளம் பாயுமா? மனித வர்க்கம் கோடிக் கணக்கில் சாகவேண்டுமா? என்பன போன்ற கேள்விகள் ஒவ்வொரு அறிவாளியின் மனதையும் உறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு வேளை இது வீண் வதந்தியாகவும் இருக்கலாம் என்று ஜினிவா நிருபர் ஒருவர் கூறுகின்றார். ஐரோப்பாவில் யுத்த தளவாடங்களைத் தயாரிக்கும் தொழிற் சாலைகள் பல உண்டு. துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் பண்ணி வைத்துக் கொண்டு அவை விற்பனையாகாதிருப்பதைக் கண்டு அந்தக் கம்பெனிக்காரர்கள் இந்த மாதிரி ஒரு சரடைத் திரித்து விட்டிருக்கிறார்களோ என்றும் சொல்கிறார்கள். இந்த 'சரட்டின்' பலனென்ன தெரியுமா? ஐரோப்பா முழுதும் பரபரப்பு! ஒவ்வொரு நாடும் 'தற்காப்புக்காக' என்று சொல்லிக் கொண்டு முஸ்தீப்புகளில் இறங்குமன்றோ! இரும்பு எடுத்தவன் கையும் துரும்பு எடுத்தவன் கையும் சும்மாயிராது என்பது பழமொழி. அந்த மாதிரி கடைசியில் இந்த ஏற்பாடுகளெல்லாம் யுத்தத்தில் கொண்டு போய் மோதுமே யன்றி விளையாட்டாக நின்று விடாது. கிழக்கு பிரஷ்யாவிலும், போலண்டு தேசத்திலும், தற்காப்புக்கான வழிகளை பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்களாம். யுத்தம் ஏற்பட்டால் விஷ வாயுக்களை எதிரிகள் வீசுவார்கள். அந்த விஷ வாயுக்களினின்று தப்புவதற்கு எவ்வாறு முக மூடிகளை யணிந்து கொள்வதென்ற பாடத்தை, போலண்டு தேசத்தின் மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். ஏனையா இந்த ஏற்பாடு?

அமெரிக்கப் பத்திரிகைகளெல்லாம் "வரப்போகும் ஐரோப்பிய யுத்தம்" என்ற விஷயத்தைப்பற்றி நீண்ட கட்டுரைகளை வெளி யிட்டுக் கொண்டிருக்கின்றனவாம். 'ஸர் பிலிப் கிப்' என்பவர் யுத்தகளத்தினின்று செய்திகளனுப்புவதில் பிரஸித்தி பெற்ற ஒரு நிருபராவர். அவருக்கு ஒரு பத்திரிகாலயத்தினர் அமர்க்கள நிருபரின் உத்யோகத்தைக் கொடுத்து விட்டதாக வதந்திகள் கூறுகின்றன.

இத்தாலியன் முஸோலினியும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய ராம்சே மாக்டனால்டும், பிரான்ஸின் பேரதிகாரியும் சமீபத்தில் கூடி ஐரோப்பிய சமாதானத்தை எப்படி ஏற்படுத்துவது என்று ஆலோசித்தார்கள். வியாதி பலமாயிருந்தால் தான் பைத்தியத்தைப் பற்றிப் பேசவேண்டும். ஆகவே ஐரோப்பாவில் உள்ளூர யுத்த ஆவேசம் புகைந்து கொண்டு வருகிறதென்றே சொல்ல வேண்டி யிருக்கிறது. சமீபத்தில் எல்லா தேசங்களுக்கும் அமெரிக்காவின் அக்ராஸனாதிபதியான ரூஸ்வெல்ட் விடுத்த செய்தியில் "யுத்தக் கருவிகளைக் குறையுங்கள்" என்று வற்புறுத்திப் பேசியிருக்கிறார். இதெல்லாம் எதைக் காட்டுகின்றன?

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அடுத்தாற்போல ஐரோப்பாவில் யுத்தம் வந்தால் அதில் ஜர்மனிக்கும் ஏதாவது இடமிருந்தேயாகவேண்டும் என்று கூறுகிறார்கள். ஜர்மனியின் பொருளாதார நெருக்கடியும், இராணுவத்தை விருத்தி செய்து கொள்ள அந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வமும் எல்லாரும் அறிந்த விஷயங்களே. மேலும் ஜர்மனிக்கு இதர வல்லரசுகளின் மீது ஓர் பெருங் குறை வெகு காலமாக இருந்து கொண்டே யிருக்கிறது. ஓயாது ஜர்மனி அதை முணு முணுத்துக் கொண்டுதா னிருக்கிறது.

சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு ஜர்மனிதான் பொறுப்பாளி என்று குற்றஞ்சாட்டி 'வர்ஸைல்ஸ்' உடன்படிக்கையில் ஜர்மனி கை யெழுத்திடுமாறு செய்தார்கள். அந்த ஒப்பந்தம் தவறான தென்றும், தம் மீது யாதொரு பழியும் இல்லை யென்றும், ஆகவே அவ் வுடன்படிக்கையைக் கிழித்தெறிய வேண்டு மென்றும் ஜர்மானியின் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். மிஸ்டர் கூச், மிஸ்டர் பே, பார்ன்ஸ் போன்ற பல அறிவாளிகள் இந்தப் பிரச்னையை ஆரத்தீர ஆலோசித்து ஜர்மனி குற்றவாளியல்ல வென்று நிரூபிக்க முயன்றும் பயனில்லாது போயிற்று. நிற்க,

வர்ஸைல்ஸ் உடன்படிக்கையைத் திருத்தியமைக்க வேண்டு மெனவும், தன்னால் யுத்த

நஷ்ட ஈடு தருவது இயலாதென்றும், தன்னிட மிருந்து பறிக்கப் பெற்ற நாடுகளேயும் காலனிகளேயும் மீண்டும் ஒப்படைக்க வேண்டு மென்றும் ஜர்மனி கேட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் ஜெர்மன் தலைவர் ஹிட்லர் பேசிய பொழுது, இதர நாடுகளுக்குச் சமத்துவமாக ஜெர்மனிக்கு ஆயுத சக்தி யிருக்க வேண்டுமென எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆகவே அடுத்த யுத்தத்திற்கு வர்ஸைல்ஸ் சமாதான உடன்படிக்கையே ஒரு காரணமாகப் போகிற தென்றால் அது ஒரு விபரீத மல்லவா?

போர்ப் படைகளை ஒவ்வொரு நாடும் குறைத்துக்கொள்ள வேண்டு மென்பதற்காகத் தோன்றிய ஆயுதப் பரிகரணப் பேச்சு வெறும் பேச்சாய்ப் போய்விட்டது. உலக சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் நாடுகளெல்லாம் இரகஸ்யத்தில் தங்கள் யுத்த தளவாடங்களைச் சீர் செய்வதில் சிரத்தை காட்டி வந்திருக்கின்றன. இவைகளெல்லாம் எங்கே போய் முட்டும்? ஹா! ஐரோப்பாவே! உன் கதி என்ன ஆகப் போகிறதோ? மிருக பலத்தின் திமிரினால் உலகுக்கு என்னென்ன கஷ்டங்கள் வரப் போகின்றனவோ? (இன்னும் வரும்).

---

## தின்றுகொண்டே தூற்றுவானேன்?

"வங்காளிகளெல்லாம் அயோக்கியர்கள்; நாணய மில்லாதவர்கள்" என்று எழுதினான் ஒரு அநாமதேய ஆங்கிலேயன். இவன் இந்திய சிவில் ஸர்வீஸில் ஒரு பெரிய உத்தியோகம் வகித்துக் கொண்டிருக்கிறான். தன் பெயரை வெளியிடாமல், "மார்னிங் போஸ்ட்" பத்திரிகைக்கு இவன் ஒரு கடிதத்தை எழுதினான். இந்தியாவின் சொத்தைத் தின்றுகொண்டே, இவ்வாறு தூறு சொல்ல இவனுக்கு என்ன துணிவு? இவனுக்கு நாம் பதில் சொல்ல வேண்டியதில்லை. மிஸ்டர் ஜார்ஜ் வில்லியம்ஸ் என்பவர் கொடுத்திருக்கும் சாட்சியமே போதும். அவர் சொல்லுவதாவது:—"நானும் வங்காள அரசாங்கத்தில் ஒரு இலாக்காவுக்கே தலைவனாக உத்தியோகம் பார்த்திருக்கிறேன். வங்காளிகளுக்குக் கீழேயும் வேலை பார்த்திருக்கிறேன். இந்தியாவிலுள்ள சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களை விட, வங்காளிகள் மிக நியாயமாக நடக்கிறார்கள். அவர்கள் நாணயமும், அறிவும் போற்றத் தக்கது." ஏ! அநாமதேயமே!

## அங்கு ஏன் அதிக வட்டி?

"1933ஆ மேமீ 10உ 120 லட்சம் பவுனுக்கு லண்டனில் இந்தியா மந்திரி கடன் பத்திரங்கள் வெளியிட்டார். இந்தக் கடன் 1947-53 ஆகிய வருஷங்களில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியது. இதற்கு வட்டி விகிதம் நூற்றுக்கு நாலு ஸ்டெர்லிங்காகும். எதற்காக, இப்பொழுது இந்தக் கடனை வாங்கினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. 15 நாளைக்குமுன் தானே இந்தியாவில் 100க்கு 3½ வட்டி வீதம் ரூபாய்க் கடன் பத்திரங்களை வெளியிட்டார்கள்! அதற்குள் லண்டன் முதலாளிகளிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?

"இங்கிலாந்து பாங்கிதான் இந்த ஸ்டெர்லிங்குக் கடன் வாங்கும்படி கட்டளை போட்டிருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. இந்தியாவில் ரூபாய்க் கடன் பத்திரங்களை வாங்கியவர்களுக்கு சர்க்கார் இதனால் அநீதி புரிந்து விட்டார்கள். சர்க்கார் 100க்கு 3½ வட்டிக் கடன் எவ்வளவு கேட்டார்களோ அவ்வளவு தொகையும் கேட்ட சில நிமிஷத்திற்குள் இந்தியாவில் கிடைத்திருக்கும் பொழுது, அரை வட்டி கூடுதலான லண்டன் கடனை மறுபடியும் வாங்கியது சர்க்காருக்கும் நஷ்டந்தானே."

இந்த விஷயத்தை ஓஜா என்பவர் எடுத்துக் காட்டி யிருக்கிறார். உண்மை தான். இந்தியன் கொடுத்த வரிப்பணத்திலிருந்து இந்தியனுக்குக் கொடுக்கும் வட்டி 3½ விகிதம்; லண்டன் முதலாளிக்கோ 4 விகிதம் வட்டி. ஏன் இந்த வித்தியாசம்? இது மாத்திரமா? சர்க்கார் லண்டன் கடனை வாங்கியதால், பம்பாய் கில்ட் எட்ஜ் பத்திரங்களின் விலை திடீரென்று தத்தளித்து விட்டதாம். இதனால், பம்பாய் நாணய மார்க்கட்டே அலங்கோலமாகி விட்டது. வியாபாரம் சரிவர நடக்காமல் பம்பாய் நாணய மார்க்கட்டிலுள்ள கடைகளை மூடி வைக்க நேர்ந்ததாம். இனி எப்பொழுது மறுபடியும் மார்க்கட் சரியான நிலைமைக்கு வருமென்பதைச் சொல்ல முடியாது என்று ஒரு முதலாளி கூறுகிறார். இப்படி இந்தியாவில் அவந்தரை நிலைமையை உண்டாக்கிய லண்டன் கடனைச் சர்க்கார் வாங்கியது எந்த நியாயத்தில் சேர்ந்தது?

---

உன் புளுகு ஒரே நாளில் வெளிப்பட்டு விட்டதே. இப்பொழுதாவது வாலை யடக்கிக் கொண்டு கிடப்பாயா?

## பட்டினி மகான்

'தனக்கென வாழா பிறர்க்குரியாளர்' என மகாத்மாவை வர்ணிக்கிறார்கள். பிறருக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டுமென்பதற்காக கஷ்டத்தைத் தானே யேற்றுக் கொள்வதென்பது காந்திஜி வெகு காலமாக அநுஷ்டித்து வரும் ஓர் விஷயமாகும். ஆதியில் அவர் ஆப்பிரிக்காவில் இருந்தபோது அவர் உபவாச மேற்ற கதையை 'அட்வான்ஸ் பத்திரிகை'யில் ஒருவர் எழுதியிருக்கிறார்.

நேட்டாலில் போனிக்ஸ் என்ற இடத்தில் மகாத்மாவின் ஆசிரமம் இருந்தது. ஆசிரமத்தினர் நாக்கை அடக்கி வாழ வேண்டுமென்று உணவு வகைகளில் அதிகக் கட்டுப்பாடுகளை காந்திஜி ஏற்படுத்தியிருந்தார். ஆசிரம வாஸிகளுக்கு ஆசிரம உணவு அடியோடு அலுத்து விட்டது. டர்பனிலிருந்து இரகஸ்யமாக சிற்றுண்டிகள் வரவழைத்துச் சிலர் தின்று வந்தனர். காந்திஜியின் குமாரரில் ஒருவனும் அந்தக் காரியத்தைச் செய்தான். கடைசியில் காந்திஜிக்கு இந்த விஷயம் எட்டி விட்டது. அவர் மாலைப் பிரார்த்தனை முடிந்ததும் எல்லோரிடமும் இதைப்பற்றி விசாரித்தார். சிலர் உண்மையை ஒளித்தார்கள். உடனே காந்திஜி தமது கைகளால் கன்னத்தில் பளீர் பளீரெனப் போட்டுக் கொள்ள ஆரம்பித்தார். "நான் பாபி! அதனால் தான் உண்மை மறைக்கப் படுகின்றது" என்று முணு முணுத்துக் கொண்டே காந்திஜி கன்னத்திலடித்துக் கொண்டே யிருந்தார். தங்கள் குருநாதனின் இந்த அவஸ்தையைத் தாளமுடியாது கடைசியில் அனைவரும் தங்கள் தப்பிதத்தை ஒத்துக்கொண்டனர்.

இன்னொரு தடவை ஆசிரமத்திலிருந்த ஒரு இளைஞனும், யுவதியும் ஒழுங்கு மீறி நடந்து விட்டதாகத் தெரியவந்தது. "எனக்கு அச் செய்கையால் ஏற்பட்ட வருத்தத்தைத் தெரிவிப்பதற்கும் அவர்களுக்கேற்பட்ட பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்வதற்கும் ஒருவாரம் உண்ணாவிரதம் கிடப்பதே வழியென்று தோன்றிற்று. அந்த ஒருவார விரதத்துக்குப் பின்பு 4½ மாத காலம் ஒருபொழுது சாப்பிட்டு வந்தேன். எனது விரதத்துக்குப் பலன் கிடைத்தது. ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பை உணர்ந்து பாவம் செய்யாது நடக்கத் தொடங்கினர்" என்று காந்திஜியே அதைப் பற்றிக் கூறி யிருக்கிறார்.

## சர்க்கார் சத்திரச் சாப்பாடு

காந்திஜியின் பேரனான ஸ்ரீயுத காந்திலால் காந்தியும் இன்னும் சில இளைஞர்களும் போர்ஸாத் என்ற ஊரில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கிக் கொண்டிருந்தார்களாம். இவர்களை அரசாங்கத்தார் கைது செய்து ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டார்கள்.

அவர்கள் விநியோகித்த துண்டுப் பிரசுரங்களில், "சட்ட மறுப்பை நிறுத்தி விடவேண்டும்" என்று விளம்பரம் செய்யப் பட்டிருந்ததாம். சட்ட மறுப்பை நிறுத்தச் சொன்ன இளைஞரிடத்திலுமா சர்க்காருக்குக் கோபம் வரவேண்டும்? ஆனால் 'காந்திலால்' தண்டனையடைந்த செக்ஷனைக் காணும்போது நமக்கு ஒரு கருத்து தோன்றிற்று.

சோற்றுக் கில்லாமல் திரியும் நாடோடிகளைத் தண்டிப்பதற்காக ஓர் சட்ட முண்டு. அந்த சட்டத்தின் கீழ் தான் காந்திலாலின் கோஷ்டி தண்டிக்கப் பட்டிருக்கிறது. காந்தியடிகளுக்குப் பேரனாகப் பிறந்து சோற்றுக் கில்லாமல் ஒருவன் அல்லாடுவதை அரசாங்கத்தார் காணச் சகிக்காமல் சர்க்கார் சத்திரத்தில் அவருக்கு சாப்பாடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போலும்! சர்க்காருக்கு என்ன கருணை! என்ன கருணை! சட்ட மறுப்பை நடத்த வேண்டுமென்றோ அல்லது நிறுத்த வேண்டுமென்றோ எத்தகைய விளம்பரங்களைப் பிரசுரித்தாலும் இந்த இளைஞரைச் சிறையில் போட்டே தீருவதென்று அந்த ஊர் போலீசார் முயற்சியெடுத்துக்கொண்டிருந்தார்கள் என்று ஏற்படுகிறது. நிற்க,

காந்தியடிகளின் பிள்ளை வயிற்றுப் பிள்ளை ஒருவன்தானா இந்த சத்திரச் சாப்பாட்டுக்கு அகப்பட்டவன்? சோற்றுக் கில்லாமல், நாடோடிகளாய் எத்தனை கோடிக் கணக்கான பெயர்களை வேண்டுமானாலும் காந்தித் தாத்தா காட்டுவதற்குத் தயாரா யிருக்கின்றார். அத்தனை பேரையும் ஓரிடத்தில் போட்டுச் சோறுபோட சர்க்கார் தயாரா?

---

## தேர்தல் பித்தர்கள்

சட்ட சபைப் பித்தர்கள் உதகமண்டலத்தில் உட்கார்ந்து கொண்டு, வரப்போகும் தேர்தலுக்கு அதற்குள்ளேயே பேரம் பேச ஆரம்பித்து விட்டார்களாம். ஐக்கிய தேசியக் கட்சியாரும் ஜஸ்டிஸ் கட்சியாரும் ஒன்று சேர வேண்டுமாம். காங்கிரஸ் போட்டிக்கு வந்தால் அதைத் தோற்கடிக்க வேண்டுமாம். இதற்குப் பலமான யோசனைகள் நடக்கின்றனவாம். புதிய கட்சி ஒன்று ஏற்பட வேண்டுமாம். இதற்காக, ஆட்டை யெடுத்து மாட்டில் போடுவதும் மாட்டை யெடுத்து ஆட்டில் போடுவதுமாக, என்னென்னவோ 'தகிடுதத்தங்கள்' நடக்கின்றனவாம்.

இப்பொழுதே இந்தத் தேர்தல் வியாபாரத்துக்காக, சிலர் தங்கள் தோட்டம் துறவுகளை விலை பேசிக்கொண்டிருக்கிறார்களாம். தேர்தல் என்றால், அது என்ன அற்ப சொற்பமான வியாபாரமா? லட்சக் கணக்காக அல்லவா செலவழிக்க வேண்டும்? "வரும் தேர்தலில் ஒவ்வொரு வோட்டின் விலையையும் யானை விலை, குதிரை விலையாகச் செய்து விடுகிறேன், பார்" என்று சிலர் உறுமிக் கொண்டிருக்கிறார்களாம்.

'ஹரிஜன சேவைக்குக் காலணாக் கொடு' என்றால், மென்று முனகும் பேர்வழிகளெல்லாம் தேர்தலுக்கு இப்பொழுதே பெரிய பெரிய பண முடிப்புகளை எடுத்துவைத்து விட்டார்களாம். அப்படி என்ன மோகமோ தேர்தலில் என்று கேட்கிறீர்களோ? நல்ல முண்டாசாகக் கட்டிக் கொள்ளலாம்; கால்சராய், கைச் சட்டை போட்டுக் கொள்ளலாம்; கவர்னரோடு கை குலுக்கலாம்; நாற்காலிகளில் அலங்காரமாக உட்காரலாம்—இவற்றை விட மனிதனுக்கு வேறென்ன பாக்கியம் வேண்டும்?

யார் ஜெயித்தாலும் காங்கிரஸ்காரர் மாத்திரம் உள்ளே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சில பிரமுகர்கள் ரொம்பப் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது தேர்தலைப்பற்றி நினைக்கவே யில்லையே, அப்படியிருக்க இவர்களுக்கு என் இந்தப் பர பரப்பு? புதிய சீர்திருத்தம் வர ஒருவருடமாகப் போகிறதோ, அல்லது இரண்டு வருஷந்தான் ஆகப்போகிறதோ, வராமலே, புகைந்து போன பூவாணமாய்த் தான் போகிறதோ, யாருமே அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. இந்த நிலைமையில் தேர்தலைப்பற்றி என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?

குளத்தங் கரையில் பெண்கள் நாலுபேர் கூடினால், உடனே சமையலைப் பற்றித்தான் பேசுவார்களாம். அடுப்பங்கரை, சமையல், சேலை, நகை, பூ இவைகளைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் தெரியாதென்பார்கள். அதே மாதிரி உதகமண்டலத்தில் ஜிலு ஜிலுப்பிலிருக்கும்' ராஜீய வாதிகளுக்கு, தேர்தல், வகுப்பு வாதம், உத்தியோக வேட்டை இவற்றைத் தவிர வேறு பேச்சே பேசத் தெரியாது போலிருக்கிறது. இவர்களுக்கு வேறெந்தக் கவலையும் கிடையா தல்லவா?

மகாத்மா காந்தி, மகா தியாகத்தில் இறங்கியிருக்கிறார். நாடெங்கும் மிச்ச நாளும் நல்ல பொழுதாய்ப் போக வேண்டுமே யென்று பெருங் கவலையிருந்து வருகிறது. சில திடு திண்டுங்கள் ஒரு காரியமு மில்லாமல், ஜான்புல் காட்டும் செப்படி வித்தையைப் பார்த்துவிட்டு வருவதற்காக லண்டன் போயிருக்கின்றன. சட்ட மறுப்பு ஆறு வாரத்திற்கு நிறுத்தப் பட்டிருக்கிறது. ஐயனின் உபவாசம் முடிந்ததும் ராஜீய உலகில் என்ன அதிர்ச்சி ஏற்படப் போகின்றதோ ஒன்றும் புரியவில்லை. ஐயன் ஏரவாடாக் கோயிலுக்கே திரும்பப் போகின்றாரா அல்லது வேறேதும் நிகழ விருக்கின்றதோ ஒன்றும் தெரியவில்லை. இந்த விஷயங்களி லெல்லாம் சிறிதும் கவனம் செலுத்தாமல், தேர்தல் வெறி பிடித்து அலைகிறார்களாம் சில பித்தர்கள்! என்னே இவர்கள் மதி யிருந்தவாறு!

---

"குடியானவர்களும் உண்டு"

"இந்தியாவின் சுதந்திர இயக்கம் ஏதோ படித்த சில பேர்களிடையே மட்டும் இருந்து வருவதாகச் சொல்வது தப்பு. எல்லா வகுப்பினரும் இப்போது இந்திய விடுதலைப் போரை ஆதரிக்கின்றனர். அநேக குடியானவர்களும் இப்போது இவ்வியக்கத்தில் அநுதாபம் காட்டுகின்றனர். வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்து வந்தவர்களும் இப்போது இந்தியாவில் விழித்துக் கொண்டு விட்டனர்" என்று திரு. போலக் என்பார் லண்டனில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். இந்த உண்மையை இந்தியனுப் பிறந்த ஒரு ராமசாமி முதலியாரும், ஒரு கிருஷ்ணமாச்சாரியாரும் உணர்ந்து கொள்ளவில்லையே என்று நாம் ஆச்சரியப்பட வேண்டி யிருக்கிறது.

## நமது சல்லடையில்

### குதர்க்கமும் குறும்பும்

"ஹரிஜன இயக்கத்துக்காக மிஸ்டர் காந்தி உபவாசமிருக்கப் போகிறாரென்று சர்க்கார் அவரை விடுதலை செய்தார்கள். ஆனால் அவரோ வெளி வந்ததும் அரசியல் அறிக்கை யொன்றை விடுத்தார். இது நியாயமா?" என்று ஒரு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை உறுமுகிறது. திக்குத்திசை தெரியாமல் ராஜீய உலகம் தவித்துக் கொண்டிருந்த போது சரியான வழி காட்டிய மகாத்மாவை சர்க்கார் போற்ற வேண்டும். ஆனால் சர்க்கார் தாசர்களோ வழி காட்டியதை நியாயமல்ல வென்று குற்றங் கூறிக் குதர்க்க வாதம் செய்கின்றனர். ஹரிஜன இயக்கத்தின் காரணமாகவே மகாத்மாவை விடுதலை செய்தார்களாம்! அப்படி யிருந்தால் அந்த நிபந்தனையை சர்க்கார் ஆதியிலேயே மகாத்மாவிடம் சொல்லி யிருக்கலாமே! நிபந்தனையோடு மகாத்மா எப்போதும் விடுதலையை யேற்க மாட்டார் என்பது உலகறிந்த விஷயம். மகாத்மாஜி தமது விடுதலையை அரசியலுக்கு உபயோகப்படுத்திக் கொண்டா ரெனக் கூறுவதைப் போன்ற குறும்புப் பிரசாரம் வேறில்லை.

### சமஸ்தான வாழ்வு

பிரிட்டிஷாரின் பிரசாதமாகிய வெள்ளைக் கடுதாசித் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தை கேள்வி முறையின்றி விட்டு விட்டார்கள். இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களில் சுமார் 8 கோடி ஜனங்களிருப்பதாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. வெள்ளைக் கடுதாசித் திட்டத்தில் இந்த 8 கோடி மக்களுக்கு துளி இடமும் தரப்படவில்லை. சுதேச சமஸ்தானங்களை ஆளுகின்ற அரசர்களின் யதேச்சாதிகாரமும் பணத்திமிரும் கொஞ்சம் நஞ்சமன்று. சமஷ்டி அரசியலுக்கு அங்கத்தினர்களாகத் தங்கள் கை யாட்களை அரசர்கள் அனுப்புவார்களே யன்றி பிரஜைகள் பிரதிநிதிகளைத் தெரிந் தெடுத்து அனுப்புவதற்கு விட மாட்டார்கள். சமஸ்தானங்களிலுள்ள 8 கோடி ஜனங்களும் இந்தியர்கள் தானே! அவர்களுக்கு ஜனநாயக உணர்ச்சி கிடையாதா? எப்போதும் இஸ்டேட் ராஜாக்கள் கால்களின் கீழேயே அவர்கள் அகப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? இந்த விஷயத்தில் சுதேச சமஸ்தானப் பிரஜைகள் விட்டுக் கொடுத்துவிடுவார்களா?

### உபாத்தியாயருக்கு 'பாடம்'

'ஜோன் ஆப் ஆர்க்' என்பவள் பிரான்ஸு தேசத்துக்காக போர் புரிந்த ஓர் வீர மாது. அம் மாதரசியை பிரஞ்சுக்காரர் பெரிதும் போற்றி வருகின்றனர். குழந்தைகளுக்குக் கூட 'ஜோன்' பெண்மணி என்றால் பயபக்தி அதிகம். நவில்ஸார்தே என்ற ஊரில் சிறுவர்களும், குழந்தைகளும் படிக்கின்ற ஓர் பள்ளிக்கூடமுண்டு. அப் பள்ளிக்கூடத்தில் ஓர் உபாத்தியாயர் ஒரு நாள் 'ஜோன்' பெண்மணியைப் பற்றி ஏதோ இழிவாகப் பேசினாராம். குழந்தைகளுக்கு இதை சகிக்கக்கூட வில்லையாம். குழந்தைகள் வகுப்பை, விட்டு வெளியே வந்து, ஓர் கூட்டம் நடத்தி உபாத்தியாயரைக் கண்டித்தன. பள்ளிக்கூடத்துக்குப் போவதில்லை யென முடிவு செய்து குழந்தைகள் வீட்டுக்குப் போய்விட்டனவாம். என்னே இந்தக் குழந்தைகளின் தேச பக்தி!

இந்தியப் பள்ளிக்கூடங்களில் உள்ள உபாத்தியாயர்கள் இச் சம்பவத்தினின்றும் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நமது நாட்டிலும் குழந்தைகளுக்கு தேச பக்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தேசத் தலைவனையோ, தேசிய இயக்கத்திலீடுபட்ட வீரப் பெண்மணியையோ யாராவது ஒரு உபாத்தியாயர், தவறாகக் கூறினால் வகுப்பிலுள்ள குழந்தைகளுக்குக் கோபம் வரத்தான் வரும். காலம் மாறி வருகின்றதை உணர்ந்து அதற்கேற்ப உபாத்தியாயர்கள் நடந்து கொள்ள வேண்டுமன்றோ!

### வம்பனுக்கு வாய் மூடி

"இந்தியாவோடு சமாதானம் செய்து கொள்ளா விட்டால் லங்காஷயருக்கு கதி மோக்ஷ மில்லை யென்பதை லங்காஷயரிலுள்ள தொழிலாளிகள் உணர்ந்து கொண்டு விட்டனர். இந்தியாவுக்கு விரோதமாக இத்தனை நாள் சர்ச்சில் என்ற வம்பன் திரிசமனாகச் செய்த பிரசார மெல்லாம் வீணாய்ப் போய் விட்டது" என்று தீனபந்து ஆண்ட்ரூஸ் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இனிமேலாவது சர்ச்சில் தனது ஊத்தை வாயை மூடுவானா?

---

## பட்டதாரி நாவிதர்

அமரநாதர் ஒரு லாகூர் இளைஞர். உயர் குடும்பத்தில் பிறந்தவர். காலேஜ் படிப்புப் படித்தவர். ஆங்கிலப் படிப்பின் பயனின்மையை உணர்ந்து, க்ஷவரத் தொழிலில் இவர் இறங்கி யிருக்கிறார். க்ஷவரத் தொழிலில் நூதன முறைகளைக் கற்க, இப்பொழுது லண்டனுக்குச் செல்லவும் தீர்மானித்திருக்கிறார். இளைஞரின் தொழில் உணர்ச்சியும் முயற்சியும் பெரிதும் பாராட்டத் தக்கவை தான். சிறு வயதிலேயே பயனில்லாத ஆங்கிலப் படிப்பில் காலத்தையும் பணத்தையும் வீணாக்கி யிராமல், இப்பயிற்சியில் இறங்கி யிருந்தால் எவ்வளவு மிச்சம் ஏற்பட்டிருக்கும்! கல்லூரிப் படிப்புக்குச் செலவழித்த பணத்தில் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு ஏற்கனவே புறப்பட்டிருந்தாரானால், தொழிற் பயிற்சி மாத்திரமல்ல, அறிவு விருத்தி ஆங்கில பாஷா ஞானம் ஆகிய எல்லாமே நிறைய ஏற்பட்டிருக்கும். குருட்டுத் தனமாக, வீட்டையும் வாசலையும் விற்று, ஆங்கிலப் படிப்பில் அள்ளி யிறைத்துக் கொண்டிருப்போருக்கு அமரநாதர் உதாரணம் கண்ணைத் திறக்குமா?

---

## வங்காள அரசியல் போக்கு

மேமீ முதல் வாரத்தில் மாத்திரம் வங்காள மாகாணத்தில் பல விடங்களில் 56 கொள்ளைகள் நடந்திருக்கின்றனவாம். ஏராளமான விசேஷப் போலீஸும், சிப்பாய்கள் கூட்டமும் வங்காளத்தில் தான் நடமாடிக் கொண்டிருக்கின்றன. போலீஸ்காரருக்கும், சிப்பாய்களுக்கும் நடுவிலேயே இவ்வளவு கொள்ளைகளா? அவர்கள் உறங்கிக்கொண்டா யிருக்கிறார்கள்? சிட்டகாங்கில் யாரோ குண்டு போட்டார்களாம்; அதற்கு ஊரில் உள்ளவருக்கெல்லாம் 70 ஆயிர ரூபாய்க்கு மேல் தண்ட வரி போட்டுத் தண்டியாயிற்றும், ஆனால் அந்த ஆள்கள் பட்டில் இன்னும் அகப்படவில்லையாம். விசேஷப் போலீசும், ராணுவமும் வந்ததன் பயன் என்ன? சர்க்காரிடம் ஜனங்களுக்குப் பீதியும் வெறுப்பும் உண்டானது தான் கண்ட பயன். சர்க்கார் உத்தியோகஸ்தன் என்றால் ஜனங்கள் அண்டவும் அஞ்சும்படி செய்துவிட்டால், நீதி பரிபாலனம் எவ்வாறு நடக்கும்?

### வக்கீல்களுக்கு நோட்டீஸ்

பெல்காமில் 8 வக்கீல்களுக்கு ஜில்லா ஜட்ஜு ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறாராம். அதில் சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றதால், அந்தத் தொழிலைச் செய்வதற்கு அருகதையை இழந்து விட்டதாக ஏன் கருதக்கூடா தென்பதற்குக் காரணம் காட்டும்படி எழுதி யிருக்கிறது. மகாத்மாவின் சிஷ்யர்களில் ஒருவரான கங்காதரராவ் தேஷ்பாண்டேயுக்கும் நோட்டீஸ் வந்திருக்கிறது.

### தண்டனை

ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் சர்வாதிகாரியான சர்தார் நர்மதா பிரதாப் சிங் என்பவரின் வீடும் சோதனை யிடப்பட்டு அவருக்கு 9 மாதம் தண்டனையும், அவர் வீட்டுச் சேவகனுக்கு 5 வாரமும், இன்னொருவருக்கு 6 மாதமும் தண்டனை விதிக்கப்பட்டது.

பம்பாயில் 18 பிரபலஸ்தர்களைப் போலீசார் தேடுகின்றார்களாம். மிதுனபுரியில் ஒருவர் கைது.

### பள்ளிக்கூடம்

சங்கரன் கோவில் தாலுக்கா உசிலங்குளத்தில் ஒரு ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு "எட்டயப்பன் வித்தியாலயம்" என்று பெயரிடப் பட்டிருக்கிறது.

---

## 'சங்கு சகாய நிதி'

| | | | | |
|---|---|---|---|---|
| முன் வரவு | ரூ. | 130 | 0 | 0 |
| துரைசாமி, கும்பகோணம் மூலியம் வசூல் | | 9 | 14 | 0 |
| மீனாக்ஷி அம்மாள், பாந்தரா பம்பாய் | | 2 | 0 | 0 |
| பங்களூர் | | | | |
| எம். லெக்ஷ்மணன் | | 2 | 0 | 0 |
| தம்மையா நாயுடு | | 2 | 0 | 0 |
| நாகரத்தின முதலி | | 1 | 0 | 0 |
| பெருமாள் | | 1 | 0 | 0 |
| நடேசன் | | 1 | 0 | 0 |
| மோகனம் | | 1 | 0 | 0 |
| செல்வராஜு | | 1 | 0 | 0 |
| விசுவநாதன் | | 1 | 0 | 0 |
| குப்புஸாமி | | 0 | 8 | 0 |
| கெங்காதரம் | | 0 | 8 | 0 |
| நடேசன் | | 0 | 4 | 0 |
| நெசவாளர்கள், வண்ணைப்பட்டி | | 1 | 0 | 0 |

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.